

அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் பகுதிச் செயலாளர் வி.சுதாகர் தலைமையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதல்படி, துணை முதல்வரால் நடத்தப்பட்ட ”என் உயிரினும் மேலான பேச்சுப்போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்ற கருத்தியல் முதல் தொடர் பேச்சரங்கம் எழும்பூர் தெற்கு பகுதியில் நடைபெற்றது. திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன், இளம் பேச்சாளர்கள் ம.மோகநிதி, செல்வி.செ.ஜோதி உரையாற்றினர்.

## ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்களின் நிலைகுறித்து

# கோவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

## நவ. 5, 6 தேதிகளில் நடைபெறுகிறது!

சென்னை, நவ. 4-

**திராவிட மாடல் அரசின் திட்டங்களின் நிலைகுறித்து கோவையில் வருகிற நவம்பர் 5 மற்றும் 6 ஆகிய இரு தேதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வு நடத்துகிறார். அதைத் தொடர்ந்து மற்ற மாவட்டங்களில் கள ஆய்வை நடத்தப் போவதாகவும் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.**

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பக்கத்தில்,

“அமெரிக்கப் பயணத்திற்கு முன்பாகவே நான் கேட்டுக் கொண்டபடி, அமைச்சர்கள் பலரும், அவரவர் துறை சார்ந்த மற்றும் மாவட்டங்களில் உள்ள பணிகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை அளித்திருந்தனர்.

எதிர்வரிசையிலே இருப்பவர்கள், திராவிட மாடல் அரசு மீது அடிப்படையில்லாத அவதூறுகளைப் பரப்ப முனைந்து, அதிலும் முனை முறிந்து போயிருக்கிறார்கள்.

திராவிட மாடல் அரசு தனது திட்டங்களை முழுமையாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கையுடன் உள்ள தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில், பண்டிகை நாட்கள் முடிவடைந்த பிறகு, நவம்பர் 5, 6 தேதிகளில் கோவைக்குச் சென்று கள ஆய்வினைத் தொடங்க இருக்கிறேன்.

மற்ற மாவட்டங்களிலும் தொடரவிருக்கிறேன். **கள ஆய்வும் தொடரும், திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களும் தொடரும்!**

“அரசு சார்ந்த பணிகளை மட்டும் தான் கவனிப்பீர்களா?” என்று உடன்பிறப்புகளான உங்களின் மனக்குரலை ‘உங்களில் ஒருவனான’ நான் அறிவேன். கள ஆய்வுப் பணிகளை அந்தந்த மாவட்டங்களில் நிறைவு செய்தபிறகு, கழகப் பணிகளையும் ஆய்வு செய்வேன்.

கண்மணிகளாம் உடன்பிறப்புகளையும் நேரில் கண்டு நெஞ்சம் மகிழ்வேன்!”

- என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டிருந்தார்கள்.

தமது இவ்வறிவிப்புக்கொப்ப, திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக்கப் படும் திட்டங்களின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்திட கோவையில் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

## தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் புதிய தலைவராக

# முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் தேர்வு!

## ஆட்சிக்குழு ஒருமனதாகத் தெரிந்தெடுத்தது!

சென்னை, நவ.4-

**தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் புதிய தலைவராக தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களை, ஆட்சிக்குழு ஒருமன தாகத் தேர்வு செய்துள்ளது.**

அதன் விபரம் வருமாறு:-

தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்குத் தலைவர்களாக இதுவரை தி.சு.அவினாசிலிங்கம், (15/08/1947 07/12/ 1982), சி.சுப்பிரமணியம் (08/12/1982 09/03/1990), முனைவர் வா.செ. குழந்தைசாமி (10/3/1990 10/12/ 2016) அவருக்குப் பின் முனைவர் பொன்னவைக்கோ ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.



இப்போது 24/10/24 கூடிய ஆட்சிக்குழுவும் பொதுக்குழுவும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகத் தமிழ்ப் பல்கலைக் கழக மேனாள் துணை வேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களை ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

இந்திய மொழிகளிலேயே தமிழுக்குத்தான் முதல் கலைக் களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. உருவாக்கிய அமைப்பு தமிழ் வளர்ச்சிக் கழகம். உருவாக்கியவர் அப்போது சென்னை மாகாணக் கல்வி அமைச்சராக ( 1946 1949) இருந்த திசு. அவினாசிலிங்கம் . இவர்தான் தமிழ்வழிக் கல்வியை அறிமுகம் செய்தவர்.

இந்தியா விடுதலை அடைவதற்கும் முன்பே 1946 இல் தமிழ் வளர்ச்சிக்கழகம் தொடங்கப்பட்டிருக்கிறது.

விடுதலை அடைந்த ஆகஸ்ட் 15, 1947 ஆம் நாள் கலைக்களஞ்சியத் திட்டத்தை அறிவித்திருக்கிறது தமிழ் வளர்ச்சிக் கழகம்.

சிலப்பதிகாரத்திற்கு உரை தந்த தமிழிசை இயக்கத்தை உருவாக்கிய விடுதலைக்குப் பிறகு இந்திய அரசின் முதல் நிதி அமைச்சரான ஆர்.கே.சண்முகம் செட்டியார், சென்னைப் பல்கலைக்கழகத்தில் 27 ஆண்டுகள் துணை வேந்தராக இருந்த ஏ. எல்.இலட்சுமணசாமி முதலியார், வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியார், டி.கே.சிதம்பரநாத முதலியார், கல்கி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உதவியுடன் பெ. தூரனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கலைக்களஞ்சியத் திட்டம் அக்டோபர் 20, 1947 இல் தொடங்கப்பட்டிருக்கிறது.

கலைக்களஞ்சியம் தயாரிப்பதற்கான அறிஞர் குழு அப்போதைய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் அமைக்கப்பட்டி ருக்கிறது. அதில் மு.வ., ரா.பி.சேதுப்பிள்ளை, தெ.பொ. மீ., டி.கே.சி. ஆகியோர் உறுப்பினர்களாகவும் கல்கியும் கே.சுவாமி நாதனும் செயலாளர்களாகவும் இருந்துள்ளனர்.

கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளும் குழந்தைகள் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளும் மருத்துவக் களஞ்சியம் 13 தொகுதிகளும் சித்தமருத்துவக் களஞ்சியம் 7 தொகுதிகளும் ஆங்கில மொழியாக்கம் 5 தொகுதிகளும் அறிவியல் தொழில் நுட்பக் களஞ்சியம் 5 தொகுதிகளும் மற்றும் குறுந்தகடுகளும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

## மயிலாடுதுறை மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

மயிலாடுதுறை . நவ.4

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை, பூம்புகார், சீர்காழி ஆகிய 3 சட்ட மன்ற தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சாரிபார்ப்பு மற்றும் வாக்காளர் சேர்தல் முகாம் நடைபெறுகிறது. இதில் 1.1. 2025 ல் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களை (31.12.2006க்கு முன் பிறந்தவர்கள்) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படலாம். இந்த வாக்காளர் சேர்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் சிறப்பு முகாம் 16.11.2024 சனி, 17.11.2024 ஞாயிறு மற்றும் 23.12.2024 சனி, 24.12.2024 ஞாயிறு ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இந்த சிறப்பு முகாமில் புதிதாக பெயர் சேர்ப்பதற்கு படிவம் 6, ஆதார் விபரம் சேர்க்க படிவம் 6 பி., பெயர் நீக்கம் செய்ய படிவம் 7, எழுத்துபிழைகள் , முகவரி மாற்றம் செய்ய படிவம் 8 ஆகியவற்றை பயன் படுத்தி வழங்கலாம். மேலும் இந்த படிவங்களை 29.10.2024 முதல் 28.11.2024 வரை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வழங்கலாம். மேலும் இந்த பணியில் புதிதாக தேர்ந்தேடுக்கப்பட்ட வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (பி. எல்.ஏ.2) மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றும், வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் குறித்து ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் கழகத்தினர் மற்றும் வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (பி. எல்.ஏ. 2) தெரிவித்து பணியினை செம்மையாக செய்திட வேண்டும் என்றும், பெயர் சேர்த்தல், நீக்கல் விவரங்களின் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்திட ஏதுவாக மாவட்டக் கழகத்திடம் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் ஒப்படைத்திட வேண்டும். மேலும் தற்போதுள்ள வாக்காளர் பட்டியல் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மூலம் அனைத்து கிளைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த வாக்காளர் பட்டியலை வாக்குச்சாவடி நிலை முகவர்கள், நிர்வாகிகள் ஒன்றாக அமர்ந்து ஆய்வு செய்து வாக்காளர் பட்டியல் பெயர் சேர்க்க வேண்டியவர்கள் பெயர்களை சேர்த்திடவும், ஊரில் இல்லாத, இறந்த வாக்காளர்கள் பெயர்களை நீக்கிட முதற்கட்ட பணியாக செய்திட வேண்டும்.



இவ்வாறு தனது அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ, கேட்டுக் கொண்டுள்ளார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; இந்தியத் தேர்தல் ஆணையம், இந்திய தேசியக் காங்கிரஸ் மீது தாக்குதல் தொடுத்துள்ளதே ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; அரியானா மாநிலத் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் செய்த குளறுபடிகள் தொடர்பாகவே இந்த மோதல்.**

**இந்திய அரசியல் சட்ட அடிப்படையிலான ஆணையம், சந்தேகங்களுக்குத் தக்க விளக்கம் அளித்திட வேண்டிய கடமையை நேர்மையாக நிறைவேற்ற வேண்டிய இடத்தில் இருக்கிறது. ஆனால், அத்தகைய கடமையிலிருந்து தேர்தல் ஆணையம் தவறி விட்டதோ என்ற அய்யப்பாடு அரசியல் சாராதோர் இடையேயும் எழுந்துள்ளது.**

**அரசியல் சட்ட அமைப்புகளையெல்லாம், ஒன்றிய பா.ஜ.க. அரசு கையில் எடுத்துக்கொண்டு விட்டதோ என்ற கவலை பல்வேறு முனைகளிலும் படர்ந்துவிட்டது.**

**“மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்; கங்கையே சூதகமானால், எங்கே போவது ?” என்று பசும்பொன் தேவர் திருமகனார் சொன்னதை எடுத்துக்காட்டி, அன்றொருநாள் கலைஞர் தொடுத்த வினாக் கணை, இன்றளவும் பாய்ந்து கொண்டுதானே இருக்கிறது ! வினாவுக்கு விடை எங்கே ?**

## கந்தசஷ்டி பெருவிழாவை முன்னிட்டு - திருவான்மியூர்

# பாம்பன் குமரகுருதாச சுவாமி திருக்கோயிலில் மாணவ, மாணவியரின் கந்தசஷ்டி பாராயணம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.4-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு (02.11.2024) திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாச சுவாமி திருக்கோயிலில் கந்தசஷ்டி பெருவிழாவை முன்னிட்டு சென்னை, கீழ்ப்பாக்கம், அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மற்றும் கொளத்தூர் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவியரின் கந்தசஷ்டி பாராயணம் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்து சமய அறநிலையத்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டு துறையின் பொற்காலமாக திகழ்கிறது என்றால் அது மிகையாகாது. அதற்கு திருவான்மியூர் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் திருக்கோயிலே ஒரு சாட்சியாகும்.

இந்த திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்திட 1988-ஆம் ஆண்டு பாலாலயம் செய்யப்பட்டு சுமார் 36 ஆண்டுகளுக்குப் பிறகு நீதிமன்றத்தின் மூலம் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொண்டு இந்த ஆண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டது.

அதேபோல இத்திருக்கோயிலில் மயூர வாகன சேவனத்தின் 100-ஆம் ஆண்டு விழா கொண்டாடப்பட்டு, பாம்பன் சுவாமிகளின் சரித்திரம் எனும் நூல் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. அதேபோல 1988-ஆம் ஆண்டிற்கு பிறகு அதாவது 36 ஆண்டுகளுக்குப் பிறகு இத்திருக்கோயிலில் இலட்சார்ச்சனை தொடங்கப்பட்டுள்ளது.

**மாணவ-மாணவியருக்கு பயிற்சி!**

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றான கந்த சஷ்டி பெருவிழாவின் போது திருக்கோயில் சார்பில் நடத்தப்படுகின்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் இசைக் கல்லூரி மாணவ, மாணவிகள் மூலம் கந்த சஷ்டி பாராயணம் செய்யப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருந்தோம்.

அந்த வகையில் இந்த ஆண்டு 738 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு பயிற்சி அளித்து 12 முருகன் திருக்கோயில்களில் கந்த சஷ்டி பாராணயம் செய்கின்றனர். அதன் முதல் நிகழ்ச்சியாக திருவான்மியூர் பாம்பன் சுவாமி திருகோயிலில் 120 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியரின் பாராணயம் சிறப்போடு நடைபெற்றிருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக வருகின்ற 4-ஆம் தேதி கந்த கோட்டத்திலும், 6-ஆம் தேதி வடபழனியிலும் கந்த சஷ்டி பாராயணம் நடைபெற உள்ளது. இந்த கந்த சஷ்டி பாராயணத்தில் இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படுகின்ற பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் விருப்பமுள்ள மாணவ, மாணவியர் மற்றும் இசைக் கல்லூரி மாணவியர் பங்கேற்கின்றனர்.

**ரூ. 13 லட்சத்தில் புதிதாக தேர்!**

இந்த பகுதியிலேயே வசிக்கின்ற பாம்பன் ஸ்ரீமத் சுவாமிகளின் பக்தர்கள் இந்த ஆட்சியில் இந்த திருக்கோயிலுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகளை கண்டு மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த ஆட்சியை வாழ்த்தி கொண்டிருக்கிறார்கள். பாம்பன் சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.13 லட்சம் செலவில் புதிதாக திருத்தேர் செய்து தரப்பட்டு பவனி வந்து கொண்டிருக்கின்றது. அதற்கு பாதுகாப்பு கொட்டகையையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் உபயதாரர்கள் தருகின்ற நிதி முழுமையாக அவர்கள் எந்த நோக்கத்திற்காக திருக்கோயிலுக்கு தருகிறார்களோ அவை முழுமையாக பயன்படுத்தப்பட்டு அவர்களின் நோக்கம் உறுதியாக நிறைவேறுகிறது என்பதை நம்பி இதுவரை ரூ.960 கோடியை திருப்பணிகளுக்கு மூன்றை ஆண்டுகளில் உபயதாரர்கள் வாரி வழங்கி இருக்கின்றார்கள்.

இப்படி எல்லா வகையிலேயும் இந்து சமய அறநிலையத்துறை புதுப்பொலிவோடும் பக்தர்களுடைய எதிர்பார்ப்புகளை, அடிப்படை தேவைகளை அதாவது, திருத்தேர்களை புனரமைத்தல், திருக்குளங்களை செப்பனிடுதல், பக்தர்கள் தங்கும் விடுதி, முடி காணிக்கை மண்டபம், விருந்து மண்டபம் போன்ற அனைத்து வசதிகளையும் நிறைவேற்றி வருகிறது, அதனால்தான் இந்த ஆட்சியை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இறையன்பர்கள் வாழ்த்துகின்றனர். இதன் மூலம் இறைப் பணிகளுக்கு முழுமையாக அர்ப்பணித்து செயல்படுவதில் எங்களுக்கு புதிய உத்வேகம் எழுகிறது.

**பக்தர்கள் தங்கும் விடுதி!**

திருச்செந்தூரில் கந்த சஷ்டி பெருவிழாவிற்கான ஏற்பாடு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கு இறையன்பர்கள் விரதம் மேற்கொள்ள தற்காலிக நிழல் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளதோடு, கந்த சஷ்டி விழாவின் போது ஒவ்வொரு நாளும் சுமார் ஒரு லட்சம் பக்தர்களும், சூரசம்ஹாரம் நடைபெறுகின்ற நாளன்று சுமார் 6 லட்சம் பக்தர்களும், திருக்கல்யாண நாளன்று சுமார் 2 லட்சம் பக்தர்களும் ஒட்டுமொத்தமாக சுமார் 14 லட்சம் பக்தர்கள் வருகை தருவார்கள் என்று கணக்கிடப்பட்டு அதற்கு தகுந்தாற்போல் கழிப்பிட வசதி, சுகாதார வசதி, மருத்துவ வசதி. போக்குவரத்து வசதி போன்ற அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு பணியில் 2,000க்கும் மேற்பட்ட காவல்துறை யினர் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா. சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, துணை ஆணையர் இரா.ஹரிஹரன், உதவி ஆணை யர்கள் கி.பாரதி ராஜா, கே.சிவகுமார், மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி கயல்விழி மற்றும் செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.